இணைப்பு I

160-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 305க்கான விடையைக் காண்க.

பதில்.

தரிசாக உள்ள நிலங்களைத் தீவிர சாகுபடிக்கு கொண்டு வருவதற்காக, தண்ணீர் வசதியைப் பெருக்க குழாய்க் கிணறுகள் தோண்டப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1. திருச்சி மத்திய சிறையில் மூன்று குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. ஒரு ஆழ்கிணறு இயந்திரம் பம்ப் செட் வாங்குவதற்கான செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது. மேலும் ஒரு பம்ப் செட் பொருத்தப்பட்டிருக்கிறது.

2. தஞ்சாவூர் திறந்த வெளிச் சிறையில் இதுவரை நான்கு ஆழ்கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. இரண்டு ஆழ் கிணறு இயந்திரப் பம்பு செட்டுகள் பொருத்துவதற்கான செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

3. சேலம் மத்திய சிறையில் மூன்று குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. இந்திய அரசு, தமிழ்நாட்டில் சிறைத் துறையைச் சார்ந்த விவசாய அபிவிருத்திக்கென, இணைப்பில் காட்டியபடி, மூன்று லட்ச ரூபாய் மதிப்பில் 16 குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்கு உதவ முன் வந்துள்ளது. எல்லா குழாய்க் கிணறுகளும் செயல்படத் தொடங்கினால், விவசாய உற்பத்தி பெருகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே சிறைச் சாலைகளில் காய்கறி மற்றும் தினை வகைகளில் தன்னிறைவு காண வாய்ப்பு உள்ளதாக இருக்கும். கூடுதலாக நீர் கிடைக்குமாயின் நெல் உற்பத்தியை பெருக்குவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்புகள்

மத்திய சிறைகளிலுள்ள நிலங்களில் தோண்டப்படவிருக்கும் தேவைப்படும் குழாய்க் கிணறுகள்பற்றிய பட்டியல்.

சிறைகளின் பெயர்.	சாகுபடிக்கான நிலத்தின் மொத்த பரப்பு.	தற்சமயம் சாகுபடியின் கீழுள்ள நிலத்தின் பரப்பு.	தரிசாக உள்ள நிலத்தில் தீவிர சாகுபடிக்கான பரப்பு.	தோண்டப்பட விருக்கும் குழாய் கிணறுகளின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)
1 மத்திய சிறை, சேலம்.	29 ஏக்கர்	9 ஏக்கர்	20 ஏக்கர்	2
2 மத்திய சிறை, மதுரை.	11 ஏக்கர்	5 ஏக்கர்	6 ஏக்கர்	2
3 மத்திய சிறை, பாளையங் கோட்டை.	24 ஏக்கர், 3 சென்ட்.	10 ஏக்கர் 21 சென்ட்	13 ஏக்கர், 82 சென்ட்	2
4 மாநில மகளிர் சிறை, வேலூர்.	14 ஏக்கர்	14 ஏக்கர்	..	1
5 மத்திய சிறை, கடலூர்.	37 ஏக்கர், 30 சென்ட் (33 ஏக்கர், 18 சென்ட் சாகுபடிக்கானது)	8 ஏக்கர்	25 ஏக்கர் 18 சென்ட்	2

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

6	மத்திய சிறை, வேலூர்.	24 ஏக்கர், 66 சென்ட்	24 ஏக்கர் 66 சென்ட் (காய்கறிக்காக 3 ஏக்கர் மற்றும் சோளத்திற்காக 21 ஏக்கர்)		2
7	மத்திய சிறை, திருச்சி.	79 ஏக்கர், 41 சென்ட்	14 ஏக்கர், 60 சென்ட்	64 ஏக்கர், 72 சென்ட்	3
8	திறந்தவெளிச் சிறை, தஞ்சாவூர்.	114.18 ஏக்கர்	100 ஏக்கர்	14.18 ஏக்கர்	2
					16

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS